RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1131

OPEN ACCESS

# பாரதியின் கவிதைகளில் வாழ்வியல் நெறிகள்

**நா. ஹேமமாலதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சாரதா கங்காதரன் கல்லூரி, புதுச்சேரி-605004, இந்தியா

# Morals of Life in Bharathi's Poems

**N. Hemamalathi** [a, *]

[a] Department of Tamil, Saradha Gangadharan College, Puducherry-605004, India

* Corresponding Author: hemathana30@gmail.com

Received: 07-08-2021
Revised: 23-07-2022
Accepted: 28-07-2022
Published: 10-09-2022

Check for updates

## ABSTRACT

New poems are those that break the silence of man and capture the truths of the world in front of our eyes with feelings and are created with artistry and imagination. Now, if we look at the information given by various scholars about the poems, we can see that poets never share their thoughts in their own way as they wish, but express the ideas as the readers expect. Through it, you can keenly observe the world. Bharathi envisioned how we and our country should rise on that basis. Not only did he order many projects to be created with his thinking power, but he also promised to do the entire world's industries. He also expressed the opinion that we would work tirelessly for that and create many industries. His passion, desire, and concern for the development of all sectors are evident. On this basis, the caste ups and downs that ran rampant in his time, how Bharathi deeply focused his writing on issues such as female slavery, his dreams for modern India, his philosophy that education should be common property, and his devotional values while opening the first song of the National Anthem sung for Mother Bharatham, was described as Thayumanavar's 'Anandak Kalipu Varnamettu' (Mother is full of Joy and Happiness).' Manikkodi songs sung under the label ', the fifteen verses he sang on Bharathi's 'Sudhantirap Payir' and the eighteen verses he sang on the title 'Pazhitharivurutthal' about False Swadeshis have expressed his own thoughts. Bharathi, the pioneer of solitary poetry, castigated the community, and the excellence of his effective singing of national unity in social reforms, and his dream of what India should be in the future, are still relevant. Therefore, this article moves on the basis that we praise him as a prophet. This article tends to investigate with the conclusion that Bharathi's way can be clearly seen that any creator can get permanent fame if he is concerned with society.

**Keywords:** Bharathiyar, Bharathiyar Poems, Morals, Female Slavery, Modern India

## முன்னுரை

மனிதனின் மௌனத்தை உடைத்து உணர்வுகளைக் கொண்டு உலகில் உள்ள உண்மைகளை நம் கண் முன்னே படம்பிடித்து கலை நயத்தோடும், கற்பனை வளத்தோடும் படைக்கப்படுவது தான் புதுக்கவிதைகள். இக்கவிதைகள் தவமிருந்தாலும் வருவதற்கில்லை, தானமாகவும் பெறுவதில்லை. கவிதை என்பது கடல் போன்றது. மூழ்குவோர்க்கு முத்துண்டு. கற்பனைகளில் உயர்ந்தது. எனவே தான் காலத்தை உணர்த்தவே புதிது எனப் புலப்படுத்தினார் பாரதி. இதில் புதிது என்பதை அழகு, அதிசயம், எழில் மிக்கது எனப் பல பொருள் கொள்ளலாம்.

ஜான்சன் என்பவர் கவிதையாவது பா முறையில் அமைந்த ஒன்று என்பார். கார்லைல் என்பவர் இசை மயமான சிந்தனை என்கிறார். கற்பனையின் வெளியீடு கவிதை என்கிறார் ஷெல்லி. ஹாஷிலிட்

என்பவர் கவிதையாவது உணர்ச்சி, கற்பனை ஆகியவற்றின் மொழி என்கிறார். எட்கர் ஆலன்போ அழகை ஒளி நயத்தோடு வடித்தாலே கவிதை என்கிறார். ரங்கின் என்பவர் உயர்ந்த உணர்வுகளுக்குரிய விழுமிய நிலைகளைக் கற்பனையின் துணைகொண்டு அறிவுறுத்துவதே கவிதை என்கிறார் (Amudha Ramalingam, 2017).

சார்வாகன் புதுக்கவிதையின் உள்ளடக்கத்தை மிக அழகுபட வரையறுக்கின்றார். பல பக்கங்கள் கொண்ட வைரக்கல் என்கிறார். அழகு, ஏக்கம், மனமுறிவு, பெருமூச்சு, காதல், தத்துவம், கோபம், சந்தேகம், அறைகூவல், சமகால விமர்சனங்கள், ஆராயும் நேர்மை, பாலுணர்வு, இப்படி பல பக்கங்கள் உண்டு (Ganesan, 2016). இதனடிப்படையில் பார்த்தால் மனித உணர்ச்சிகளின் பிழிவே புதுக்கவிதை எனலாம். தனி மனிதம், சமுதாயம் இரண்டின் ஒட்டுமொத்தமே இன்றைய புதுக் கவிதையின் உள்ளடக்கம் என்று கூறுவது முற்றிலும் உண்மையே.

இதயத்தில் ஏற்படும் உணர்வுகளை வார்த்தைகளால் அழகு சொற்களால் வடித்துக் காட்டுவதில் வல்லவர்கள் கவிஞர்கள். அது கற்பனையோடு படைக்கப்பட்டாலும் அது காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தரவல்லது. காலத்தை கண்முன்னால் நிறுத்தும் வல்லமை கொண்டது. யாப்பை உடைத்து புதுக்கவிதை என்னும் வடிவத்தைத் தற்கால இலக்கியத்திற்கு செய்யுள் வழங்கியுள்ளது. சமகாலத்தில் புதுக்கவிதையை மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டாக பகுப்பர். கவிதை உணர்ச்சி பூர்வமாக இருக்குமானால் கவிஞனும் உணர்ச்சி மிக்கவனாக இருப்பான். கவிஞனின் கற்பனையில் இருந்து வரும் சொற்கள் கூட உயர்ந்த எண்ணத்தை உண்டு பண்ணும். கவிதையின் நோக்கம் ஓர் இன்ப வாயிலாக அற உணர்வை வழங்குவதே ஆகும். கூறவரும் கருத்துக்களை குறியீடுகளுடன் படைக்கின்ற போது ஒரு கவிதை உன்னத நிலையை அடையும். கவிதை மரபு என்பது பாரதியிடம் இருந்துதான் துவங்குகிறது எனலாம். இவரது கவிதைகளில் அன்பு, கருணை, பொதுவுடமை, உலகச் சமத்துவம், ஆண் பெண் சமத்துவம், பெண் கல்வி, பெண் விடுதலை, மொழிப்பற்று போன்றவை இடம்பெறும்.

கவிதை என்பது சொல்லப்படும் கருத்துக்களை தன் விருப்பம்போல் சொல்லாமல், படிப்போர் உள்ளம் விரும்பும்படி சொல்லக்கூடியது. ஒரு கவிதையின் வாயிலாக உலகத்தை உற்று நோக்க முடியும். அவ்வடிப்படையில் நம் நாடு எப்படி எல்லாம் உயரவேண்டும் என்று கற்பனை செய்தான் பாரதி. அவரது கற்பனையில் அனைத்து துறைகளும் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதில் ஆர்வமும், ஆசையும், அக்கறையும் கொண்டிருந்தார் என்பதை, கீழ்கண்ட வரிகளே நமக்கு உணர்த்தும்.

"குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்

கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்

நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்

ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்"

என்று உலக நாடுகளோடு போட்டிப் போட்டு நம் நாடு முன்னேற வேண்டும் என உணர்த்துகிறார் (Rajasekaran, 2012). பாரதியின் சிந்தனை ஆற்றலை கொண்டு நாடு உயர பலத் திட்டங்களை உருவாக்க உத்தரவிட்டதோடு மட்டுமின்றி உலகத் தொழில்கள் அனைத்தையும் செய்வோம். அதற்காக அயராமல் பாடுபட்டு பல தொழில்களை உருவாக்குவோம் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

## தத்துவ நெறி

இவரது காலத்தில் தலைவிரித்தாடிய சாதிய ஏற்றத்தாழ்வுகள், பெண்ணடிமை போன்ற பிரச்சினைகளில் பாரதி தன் பதிவை ஆழமாக செலுத்தியிருப்பார், "ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில் இழிவு கொண்ட மனிதர் என்ப இந்தியாவில் இல்லையே வாழி கல்வி செல்வம் எய்தி மனம் மகிழ்ந்து கூடியே மனிதர் யாவரும் நிகர் சமானமாக வாழ்கவே" என்று தன் கற்பனையின் வாயிலாக நவீன இந்தியாவைப் பற்றி கனவு காண்கிறார் (Subpurasu, 2012). மேலும் கல்வி அனைவருக்கும் பொதுவுடமை ஆகவேண்டும் என்ற தத்துவமும் கொண்டுள்ளார்.

“ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்

றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற

விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்”

என்று பெண்ணை இழிவு செய்த மடமையை "பெண்கள் விடுதலை கும்மி" என்ற தலைப்பில் கேலி செய்கிறார் (Subpurasu, 2012). மனித வாழ்க்கைக்கு தேவையான தத்துவங்களையும், அறநெறிகளையும் கொண்டிருந்தன என்பதை இக்கவிதையின் வாயிலாக அறிய முடிகின்றது.

புரட்சிக்கவிஞர் விடுதலைக் கவிஞர் என்று போற்றப்படும் மகாகவி பாரதியார் ஒரு பழுத்த வேதாந்தியும் ஆவார். அவரது பாடல்களை உற்று நோக்கினால் இவ்வுண்மை தெளிவு படும். "கவிஞன் ஒருவன் வாழ்ந்த காலமும் இடமும் சூழ்நிலையும் அவர் தொடர்புகொண்ட நண்பர்களும், உறவினர்களும், அவரிடம் தோன்றிய உணர்ச்சிகளும், எண்ணங்களும் அவரது கவிதைக்குப் பொருளாக அமைதல் கூடும். இவைத் தவிர அவனுக்கு வழிகாட்டியாய் இருந்த இலக்கியப் பரம்பரை, அவன் காலத்து எழுத்தாளர்கள், அவர்களுடைய எழுத்துக்களிலுள்ள இலக்கியக் கூறுகள் முதலானவையும் அவர் கவிதையை ஓரளவிற்கு உருவாக்குகின்றன" என்று டாக்டர் விஜயபாரதி கூறியதாக செ. சத்தியமூர்த்தி கூறுவதை சற்று உற்று நோக்கினால் பாரதியின் எழுத்துகளில், கடவுள் கொள்கைகளும் தாக்கம் பெற்றுள்ளமையை காணமுடிகின்றது.

## பக்தி நெறி

மனிதன் வாழ்வில் கடைபிடித்தொழுக வேண்டிய ஒழுக்க பண்புகளின் கூடாரமே பக்தி. அதுவே மனித வாழ்வில் உயர்வையும், தாழ்வையும், நன்மையையும், தீமையையும் கொண்டுவருகின்றது. பாரதி தனக்குப் பிடித்தமான தெய்வத்தின் மீது பக்தி கொண்டிருந்தாலும், எல்லா தெய்வங்களின் மீதும் தன்னுடைய தெய்வபக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். தன்னை ஒரு பொதுநிலை தெய்வ பக்தியுடையவராகவே காட்டியுள்ளார்.

தேசிய கீதத்தின் முதல் பாடலைத் தொடங்கும்போது, தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு 'வர்ணமெட்டு' என்ற முத்திரையிலேயே

"வந்தே மாதர மென்போம் - எங்கள்

மாநிலத் தாயை வணங்குது மென்போம்” (Rajasekaran, 2012). எனப் பல்லவியாகத் தொடங்குவதில் இருந்தும்,

"தாயின் மணிக்கொடி பாரீர் -அதைத்

தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்"

என்றப் பல்லவியிலும் புகழ்கின்றார் (Subpurasu, 2012). அதேப்போன்று தாயுமானவரின் கண்ணிகளும் பாரதியாரைக் கவர்ந்திருக்கின்றன.

"ஓடும் இருநதியும் ஒன்றாகக் கண்டவர்கள்

நாடும் பொருளான நட்பேபராபரமே" (Sigma Graphics, 2010).

என்று கற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் கல்லாதவர்களுக்கும் எளிதில் புரியும்படி பாடிய தாயுமானவரின் கண்ணிகளின் உத்திகளைப் பின்பற்றி பாரதியும் 'சுதந்திரப் பயிர் 'என்ற தலைப்பில்

"வானமழை யில்லையென்றால்

வாழ்வுண்டோ? எந்தை சுய

தீனமெமக் கில்லையென்றால்”

தீனரெது செய்வோமே? எனப் பதினைந்து கண்ணிகளையும் பாடியுள்ளார் (Subpurasu, 2012). கிளிக்கண்ணியை அடையாளமாகக் கொண்டு 'நடிப்புச் சுதேசிகள்' பற்றி 'பழித்தறிவுறுத்தல்' என்ற தலைப்பில்

"தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்

தடுக்க முயற்சியுறார்

வாயைத் திறந்து சும்மா - கிளியே

வந்தே மாதர மென்பார்"

என்று முடியக்கூடிய பதினெட்டு கண்ணிகளில் தன் எண்ணத்தைப் படைத்துள்ளார் (Meiyappan, 2001). தனிமனிதம் பாடும் கவிஞர்களின் முன்னோடியாக பாரதி வள்ளலாரைப் பின்பற்றி,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு

வாழும் மனிதருக்கெல்லாம்" அதுமட்டுமின்றி, "தனியொருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" (Rajasekaran, 2012).

என்ற பாடல் வரிகளை கண்டால், படிப்பவரின் உள்ளங்கள் நெகிழ வைக்கின்றனவாக அமைகின்றது.

தெய்வங்கள் பல உள்ளன என்று கூறி பகைமையை வளர்ப்பவர்களை மூடர்கள் என்று கடுமையாகச் சாடவும் செய்கிறார்

"உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்

ஒரு பொருளானது தெய்வம்" - என்றும்,

"பாருக்குள்ளே தெய்வமொன்று

இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்".

என்றும் அனைத்திலும் நிறைந்திருப்பவன் இறைவன் ஒருவனே என்றும், சண்டைகள் இன்றி மக்கள் சமத்துவமாக வாழ வேண்டும் என்றும் விரும்புகின்றார் (Meiyappan, 2001).

சமூக சீர்திருத்த நெறி:

"மனிதர் உணவை மனிதர்

பறிக்கும் வழக்க மினியுண்டோ?

மனிதர் நோக மனிதர் பார்க்கும்

வாழ்க்கை யினியுண்டோ?"

என்ற கேள்வியின் வாயிலாக இவ்வுலகில் வாழ்கின்ற உயிர்களை ஒன்றா கருதிய பாரதி ஓர் ஒப்பற்ற கவிஞர் (Meiyappan, 2001). அவர் தன் கவிதையை ஆயுதமாகக் கொண்டு, தேசிய ஒருமைப்பாட்டைத் திறம்படப் பாடினார். எதிர்கால இந்தியா எப்படி இருக்க வேண்டும் என கனவு கண்டவர். நூறு ஆண்டுகளுக்கு முன் கண்ட கனவு இன்றும் பொருத்தமாக உள்ளன. எனவே தான் அவரை தீர்க்கதரசி என்று புகழ்கின்றோம்.

நல்லதை மட்டும் செய்யும் மன்னர்களுக்குப் பல நன்மைகளைச் செய்யும் தெய்வம், தீய செயல்களை செய்பவர்களை கொன்று தின்று கூத்தாடும். எனக் கூறித் தீய செயல்களைச் செய்தால் நாடாளும் அரசன் என்றும் பாராமல் தண்டனை தரும் தெய்வம் எனக் கூறி நீதி அனைவருக்கும் ஒன்றுதான். சமூகத்தில் நடக்கும் தீமைகளைக் குறைக்க நீதி அனைவருக்கும் ஒன்று என்று தன் கவிதையில்,

“நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி

நயம்புரி வாள்ளங்கள் தாய் - அவர்

அல்லவ ராயின் அவரைவி ழுங்கிப்பின்

ஆனந்தக் கூத்தி டுவாள்"

என்று விளக்குகிறார் (Meiyappan, 2001). நம் மொழியில் புதிய பல கலைகளும், பஞ்சபூத நுட்பத்தைக் கூறும் நூல்கள் தமிழில் இல்லை என்றும், தமிழ் வளர வேண்டுமெனில் எட்டுத்திக்கும் சென்று அங்குள்ள செல்வங்களான அறிவான பலத் தகவல்கள் அனைத்தும் கொண்டு வந்து தம் மொழியில் சேர்க்க வேண்டும் என்றும்,

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்

செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்று தமிழர்கள் மனதில் மொழிப் பற்றினை வளர்த்தார் (Rajasekaran, 2012). சமயத்தின் உயர்ந்த கோட்பாடுகளை சமூகத்தில் பயன்படுத்தலாம். உறவுகள் எல்லாம் இறை வடிவமாகக் காணும் போது சமூகத்தின் அனைத்து தேவைகளையும் இறைவன் மூலம் பெறலாம். நல்ல சமூக வாழ்வின் மூலம் உயர்ந்த சமய வாழ்வை வாழலாம். இறைவன் உயர்ந்த பரம்பொருளாகவும் அரசன், குரு, தாய், தந்தை, சீடன், சேவகன் எனவும் வழிபடலாம் என்னும் உண்மைகளை கண்ணன் பாட்டு என்ற தலைப்பில் உணர்த்துகின்றார்.

## வாழ்வியல் நெறி

மனித வாழ்விற்கு அடிப்படைத் தேவை அன்பு ஆகும். அந்த அன்பு இல்லையென்றால் நாம் வாழும் வாழ்க்கைக்கு எந்தவொரு அர்த்தமும் இல்லையென்று பாரதி, அன்பின் சிறப்பினை அழகாக எடுத்துரைக்கின்றார்.

"நீயே வித்தை, நீயே தருமம்!

நீயே இதயம், நீயே மருமம்!

உடலகத் திருக்கு முயிருமன் நீயே!"

உயிர்களிடத்தில் அன்பு செய்தல் வேண்டும் என்ற இவரது உயர்ந்த ஆசை, மனிதர்களிடத்தில் வாழ்வியலை மேற்கொள்ள அவசியமான ஒன்றாக அமைகின்றது (Meiyappan, 2001).

"கூடுந் திரவியத்தின் குவைகள் - திறல்

கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் - இவை

நாடும்படிக்கு வினை செய்து - இந்த

நாட்டோர் கீர்த்தி யெங்கு மோங்க - கவி

சாடுந் திறனெனக்குத் தருவாய் - அடி

தாயே உனக்கரிய துண்டோ? - மதி

மூடும் பொய்மையிருள் ளெல்லாம் - எனை

முற்றும் விட்டகல வேண்டும்."

என்று வரங் கேட்கும் பாரதி, சமூகத்தில் மனிதப் பண்பை வளர்க்கும் உயர்ந்த பணியைச் செய்து வருகின்றார் (Meiyappan, 2001). மேலும் இவரது பெண் விடுதலைக் கும்மி சமுதாயம் அதிர முழங்குகிறது.

"யோக சித்தி வரங்கேட்டல்" - லில்

"நின்னைச் சில வரங்கள் கேட்பேன் - அவை

நேரே யின்றெனக்குத் தருவாய் - என்றன்

முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்

மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி

என்னைப் புதிய வுயிராக்கி - எனக்

கேதுங் கவலையறச் செய்து - மதி"

தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும் சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய் (என்று வரமாகக் கேட்டு வாழ்க்கையில் மகிழ்வடைய விரும்பச் செய்வார் (Meiyappan, 2001). மேலும் பெண்கள் முழு விடுதலை பெற வேண்டுமென்றால் அதற்கு அவர்கள் கல்வியை பெருந் துணையாக பற்ற வேண்டும் அவர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்ப்பாரே ஆனால், அவர்கள் அறிவுப் பயிற்சிகளில் நிகரற்ற ஆற்றல் படைத்து விடுவர். எனவே வெளிநாட்டுக்குச் சென்று படித்து வாருங்கள் என்று சொல்லி பெண் விடுதலைக் கும்மி - யில் பாரதியார் பெண்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள்

செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த

வந்தோம் எட்டு மறவினி லாணுக்கிங்

கேபெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று நீண்ட நெடுங்காலமாக அடிமைப்பட்டிருந்த பெண்கள், பாரதியின் விடுதலையை அறைகூவலாகக் கேட்டு வீர நடைப் போடுகின்றனர் (Meiyappan, 2001). அனைவரும் சமம் என்ற உணர்வைத் தம் கவிதைகளில் தந்தும் ஜாதி, மத, வேறுபாடுகளைக் களையவும் முற்படுகிறார். உலக உயிர்கள் அனைத்தையும் ஒன்று என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டை தம் பாடலின் மூலம் உணர்த்தியவர் இவர். "காக்கை குருவி எங்கள் சாதி நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்" ரன் ரன் என்றும் பாடியுள்ளார் (Meiyappan, 2001).

சொற்களின் தெளிவும், வேகமும், உணர்ச்சியும், அறிவும் கொண்ட கலவை மனிதனான பாரதி, இலக்கிய உலகில் கம்பனுக்குப் பின் பாரதி தோன்றியது முதல் நிலைக்கவி எனப் புகழும் பெருமைக்குரியவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில் 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' எனத் தமிழை வளர்க்க கட்டளை இட்டவராயிற்றே. இவரது கவிதைகளை தேசிய விடுதலை, பக்தி விடுதலை எனும் நிலைகளில் பிரிக்கலாம். மேலும் பக்திநெறிக்கு கண்ணன் பாட்டும், வேதாந்தப் பொருள் தரும் நெறிக்கு குயில் பாட்டும், தேசிய விடுதலை, பெண் விடுதலை கொண்ட விடுதலை வேட்கைக் காப்பியம் பாஞ்சாலி சபதமும் சான்றாகக் கொள்ளலாம்.

## முடிவுரை

பாரதி கவிதைகளில் சமூக மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை சமுதாய மாற்றம் தான் கவிதையின் பின்புலமாக அமைந்திருக்கின்றது. உயர்ந்த சிந்தனையோடு கற்பனையைக் கலந்து புதிய தகவல்களைத் தருகின்றவர்களில் தலைசிறந்தவர் பாரதி எனலாம். சமய ஒருமைப்பாட்டுடன், சாதி ஒருமைப்பாட்டுக்காகவும் உலக ஒருமைப்பாட்டுக்காகவும் பாடியதுடன் தேசிய மறுமலர்ச்சிக்கு மெருகூட்டி எளிய சமயநெறியினையும் நமக்குத் தந்துள்ளார். இவர் தாயுமானவரின் பாடல்களையும், பண்களையும், கண்ணிகளையும் பின்பற்றி தம் கவிதைகளில் பயன்படுத்திக் கொண்ட பாங்கு வெளிப்படுகின்றது. எனவே எந்த ஒரு படைப்பாளியும் சமுதாய அக்கறையோடு தெரிந்தால்தான் நிலைத்த புகழை பெறமுடியும் என்பது பாரதியின் வெளி கண்கூடு.

## References

Amudha Ramalingam, (2017) Kavithaigalil Puthiya Thagavalgal, Tamil Nadu Corporation for Development of Women, Chennai, India.

Ganesan, A., (2016) Aaivukovai, New Century Book House, Chennai, India.

Meiyappan, S., (2001) Bharathiyar Kavidhaikal, Thendral Nilaiyam, Chennai, India.

Rajasekaran, (2012) Bharathiyar Kavidhaikal, Seethai Pathippagam, Chennai, India.

Sigma Graphics, (2010) Thayumanavar Padalkal, Sakunthalai Nilayam, Chennai, India.

Subpurasu, V.V.K., (2012) Bharathiyar Kavidhaikal, Sura Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License